**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.102/2021**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : கருப்பு | Caste | : |
| Father 's Name / Husband Name | : அமாவாசை | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் நடுமுதலைக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சிக்கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது சாட்சிக் கையெழுத்து என்னுடையது தான். ஒச்சம்மாளும் இவ்வழக்கின் எதிரியான ராஜ்மோகனும் எனது உறவினர்கள் தான். போலிசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சியாக கையெழுத்து செய்து கொடுத்தேன். எதற்காக செய்து கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. **மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது சாட்சிக் கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

**ஆஜர் எதிரி எனக்கு என்ன உறவு என்றால் அவர் எனது பங்காளி ஆவார்.** கடந்த 05.11.2020 ம் தேதி 15.45 மணிக்கு ஆஜர் எதிரியை போலிசார் என் முன்பாகவும் பாண்டி என்பவர் முன்பாகவும் விசாரணை செய்த போது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துகொண்ட அதில் எதிரியிடமும், எங்களிடமும் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நானும் பாண்டியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ராஜ்மோகனிடம் இருந்து 32 கிராம் எடையுள்ள தங்க செயினை அருந்த நிலையில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்கான கைப்பற்றுதல் மகசரையும் நானும் பாண்டியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.102/2021**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டி | Caste | : |
| Father 's Name / Husband Name | : மணி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் டி.வி.எஸ். தனியார் தொழிற்சாலையில் பணி செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சிக்கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது சாட்சிக் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2020ம் வருடம் எனது சித்தி ஒச்சம்மாள் எனக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆஜர் எதிரி தன்னை அடித்துவிட்டதாக சொன்னார். நான் சென்று பார்த்த போது செயினை அறுத்துவிட்டான் என்று சொன்னார்கள். போலிசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சியாக கையெழுத்து செய்து கொடுத்தேன். என்னுடன் அமாவாசி மகன் கருப்பசாமியும் கையொப்பம் செய்தார். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது சாட்சிக் கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

ஆஜர் எதிரி எனக்கு என்ன உறவு என்றால் அவர் எனது பங்காளி ஆவார். கடந்த 05.11.2020 ம் தேதி 15.45 மணிக்கு ஆஜர் எதிரியை போலிசார் என் முன்பாகவும் கருப்பு என்பவர் முன்பாகவும் விசாரணை செய்த போது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துகொண்ட அதில் எதிரியிடமும், எங்களிடமும் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நானும் கருப்பும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ராஜ்மோகனிடம் இருந்து 32 கிராம் எடையுள்ள தங்க செயினை அருந்த நிலையில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்கான கைப்பற்றுதல் மகசரையும் நானும் கருப்பும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**